# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : CC No.43/2021 Date: 27.07.2026

Deposition of Witness for : **அ.சா.1**

Name : **மோனோராஜ்**

(2ம் எதிரி கார்த்தி (எ) கார்த்திகேயன் ஆஜர். 1ம் எதிரி கௌதம் (எ) சிலுவை ஆஜரில்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) நான் டிப்ளமோ படித்து, சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின்போது திரிவேணி கார் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். நான் தினந்தோறும் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவேன் என்றால் காலை சுமார் 09.00 மணிக்கு சென்றுவிட்டு இரவு சுமார் 07.00 மணிக்கு வீட்டிற்கு வருவேன். எனது வீட்டிற்கும், சஜித் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1கி.மீ தூரம் இருக்கும்.

2) சம்பவத்தின்போது எத்தனை மணிக்கு புறப்பட்டு சஜித் வீட்டிற்கு சென்றேன் என்றால் எங்கள் வீட்டில் இருந்து காலை சுமார் 11.00 மணிக்கு புறப்பட்டு மதியம் சுமார் 01.30 மணிவரை சஜித் வீட்டில் இருந்தேன். என்ன வேலைக்காக சஜித் வீட்டிற்கு சென்றேன் என்று நான் எனது புகாரிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், நண்பர் என்ற முறையில் பார்ப்பதற்காக சென்றேன். சஜித் வீட்டின் அருகே எத்தனை வீடுகள் உள்ளன என்றால் சுமார் 4-5 வீடுகள் உள்ளன.

3) சஜித் வீட்டின் வாசல்படி எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் கிழக்கு பார்த்த வாசல்படி. எனது இருசக்கர வாகனத்தை எவ்வாறு நிறுத்தியிருந்தேன் என்றால் வீட்டின் வாசலில் சைடு லாக் போட்டு நிறுத்தியிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தபோதும் இருசக்கர வாகனத்தை சைடு லாக் போட்டு நிறுத்தியிருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 600 மீட்டர்.

4) இருசக்கர வாகனத்தை யார் எடுத்து சென்றார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சஜித் வீட்டிற்கு சென்றபோது அவரது வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் சஜித், அவரது மனைவி மற்றும் அவரது குழந்தைகள் இருந்தனர். சஜித் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக யாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் காவல் நிலையத்தில் மதியம் சுமார் 01.45 மணிக்கு வாய்மொழியாக தகவல் சொன்னேன்.

5) இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக எங்கெங்கே, எவ்வளவு நேரம் தேடினேன் என்றால் சுமார் 1மணி 30 நிமிடம் நானும், மகேந்திரன் மற்றும் மோகன்பிரபு ஆகியோர் தேடினோம், மதியம் சுமார் 02.30 மணிக்கு எனக்கு எனது இருசக்கர வாகனம் மகுடஞ்சாவடியில் இருப்பதாக தகவல் கிடைத்தது. நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் இரவு சுமார் 07.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை யார் எழுதியது என்றால் போலிசார் புகாரை எழுதினார்கள், நான் கையொப்பம் மட்டும் செய்தேன்.

6) இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். விசாரித்தபோது என்னிடம் முகவரி கேட்டு எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். என் முன்னால் தட்டச்சு செய்யவில்லை என்றால் சரிதான். நான் மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்த பின்னர் எத்தனை மணிக்கு போலிசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் காலை சுமார் 10.00 மணிக்கு என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று விசாரித்தார்கள். அப்போது, மாதிரி வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

7) போலிசார் காணாமல் போன இருசக்கர வாகனத்தை எவ்வாறு கண்டுபிடித்தார்கள், யார் எடுத்து சென்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் மதிப்பு ரூ.90,000/-ம் என்று சொல்லும்போது அதற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் சஜித் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சஜித் என்பவர் சண்முகசுந்தரம் என்பவரின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

8) இந்த வழக்கில் சஜித் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னவாறு, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் இருசக்கர வாகனம் காணாமல் போகவில்லை என்றும், போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Monoraj